**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, PONNERI**

**Case No : STC No.820/2021**
**Prosecution Witness : PW 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : பிரித்திவ் | | : |
| Father / Husband Name | : பசுபதி | | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

( Accused absent. Counsel filed petition U/s.317 Of Cr.P.C. Petition heard and allowed. )

Solemnly affirmed in accordance with the Provisions of Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on the day of **04/03/2024**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

பாண்டிச்சேரியில் இடையார்பாளையத்தில் உள்ள கிருஷ்ணகுமார் என்பவரை எனக்கு தெரியாது. எனது சித்தி வசந்தியுடன் இருக்க கூடிய நபர்தான் கிருஷ்ணகுமார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் எனது புகார், வழக்கறிஞர் அறிவிப்பு, சத்தியபிரமாண வாக்குமூலம் ஆகியவற்றில் மாணிக்கராஜ் எனது குடும்ப நண்பர் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி மாணிக்கராஜ் எனது சித்தப்பாவின் மைத்துனரின் மகன் ஆவார். எனது சித்தப்பா இறந்துவிட்டார். அவரது வயது எனக்கு தெரியாது. தற்போது அவர் இருந்திருந்தால் அவருக்கு வயது சுமார் 60லிருந்து 70 இருக்கும்.

எனது சித்தப்பாவை விட மாணிக்கராஜ் வயதில் மூத்தவர் என்றால் சரிதான். மாணிக்கராஜ்தான் வயதில் மூத்தவராக இருப்பார். மேற்படி சங்கதியின்படி மாணிக்கராஜ் எனது சித்தப்பாவின் மைத்துனரின் மகனாக இருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. நான் எதிரிக்கு கடன் கொடுத்ததாக சொல்லப்படும் தேதிகளை நீதிமன்றத்தில் குறிப்பிட்டு சொல்ல தவறிவிட்டேன் என்றால் சரியல்ல. எதிரி எனக்கு கொடுத்ததாக சொல்லப்படும் காசோலையை எந்தயிடத்தில் யார் முன்னிலையில் பெற்றேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல.

எனது கூற்றின்படி 2 காசோலைகள் ஒரே தேதியில் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். எதற்காக ஒரே காசோலையாக வழக்கு தாக்கல் செய்யாமல் 2 காசோலைகளில் நிரப்பி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது பாதுகாப்பு கருதி அவரிடம் 2 காசோலைகளை வாங்கி கொண்டேன். மேற்படி காசோலைகளை நான் குறிப்பிட்டு 22.04.2019க்கு ஒரு வாரத்திற்கு

முன்பு மாணிக்கராஜ் என்பவரிடம் வாங்கினேன். நான் மேற்படி சங்கதிகளை மறைத்து புகார் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் புகாரில் அதுபற்றி குறிப்பிடவில்லை. மேற்படி காசோலை எனக்கு கொடுக்கப்பட்டது அல்ல என்றாலும், இடையார்பாளையம் கிருஷ்ணகுமாருக்கு கொடுக்கப்பட்டது என்றாலும், அதனால்தான் இவ்வழக்கில் நான் ஒரே காசோலையாக தாக்கல் செய்து வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றாலும், 2 காசோலைகள் வழக்கில் தாக்கல் செய்துள்ளதால், வேறு ஒரு நபருக்கு கொடுக்கப்பட்ட காசோலைகள் என்றால் சரியல்ல.

காசோலைகளில் உள்ள சங்கதிகளை நானேதான் நிரப்பிக் கொண்டேன். மேற்படி காசோலை தேதிக்கு ஒரு வாரத்திற்கு முன்னர் நான் எதிரியின் முன்னர் நிரப்பினேன். எதிரி அதில் கையொப்பமிட்டு கொடுத்தார். மேற்படி எதிரி முன்பு காசோலைகளை நான் நிரப்பிய சங்கதியை வழக்கில் எந்தயிடத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் எதிரிக்கு பணம் கொடுத்ததற்கான ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும், எதிரி எனக்கு காசோலை கொடுத்ததற்கான ஆவணங்கள் மற்றும் சாட்சியங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும், நான் தாக்கல் செய்துள்ள தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல.

எனது சித்தி பாண்டிச்சேரியில் கந்துவட்டி தொழில் செய்து வருகிறார் என்றாலும், அவர் மோசாடியாக பெறப்பட்ட காசோலையை நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், அதனால்தான் நான் எதிரிக்கு எதிராக எந்தவித ஆவணங்களும், சாட்சியங்களும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.